தமிழ் நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1971 அக்டோபர் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

Summer course in Archaeology

* 47 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any summer course in Archaeology was run by the Archaeology Department during 1971-72; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:

(அ) ஆம்.

(இ) பயிற்சியின் விவரங்கள்.

பயிற்சிக் காலம்	22 நாட்கள்.
இதில் சென்னையில் பயிற்சி	15 நாட்கள்.
தமிழகத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புடைய சின்னங்களைச் சுற்றிப் பார்த்தல்	7 நாட்கள்.
பயிற்சி பெற்றோர்	46 பேர்கள்.
அதில், கல்லூரி விரிவுரையாளர்கள்	11 பேர்கள்.
பள்ளி ஆசிரியர்கள்	32 பேர்கள்.
ஆராய்ச்சி மாணவர்	1 ஒருவர்
கல்லூரி மாணவியர்	2 பேர்கள்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தினராலும் இப்படிப்பட்ட வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக்கழகத்தில் 1970-ஆம் ஆண்டு இப்படிப்பட்டவொரு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. 1971-72-ம் ஆண்டு பற்றிய விவரங்கள்தான் இங்கே தரப்பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் இம்மாதிரியான பயிற்சி வகுப்பு நடத்துகிறார்களா? அப்படியானால், அதற்கும் நமக்கும் ஏதாவது இணைப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே மத்திய அரசினர் இப்படி பயிற்சி வகுப்பு நடத்துகிறார்களா என்பதுபற்றி விவரம் இல்லை. ஆனால், இப்பொழுதுதான் சென்ற இரண்டு ஆண்டுக் காலமாக இந்த முறை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பயிற்சியாளர்களுக்கு ஐம்பது ரூபாய் மட்டும் உதவித்தொகையாகத் தந்து இந்தப் பயிற்சியினை விடுமுறை நாட்களில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்வெட்டு ஆராய்ச்சி குறித்து மேலும் பயிற்சி அளிப்பதன் மூலமாகத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையை சிறப்பாக அமைக்க முடியும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் அவர்களைப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்லும் முறையை வைத்துப் பயிற்சி தருவது ஓரளவு பயன் அளித்து வருகிறது. தொல்பொருள் ஆராய்ச்சித் துறையாக இருக்கும் காரணத்தால் இதற்கு மத்திய அரசாங்க உதவியும் கிடைக்குமா என்று ஆராய வேண்டி இருக்கிறது. அப்படிக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அரசாங்கத்திற்கு இருந்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether they have prescribed text books in Archaeology and the teachers are prepared to teach that subject?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மொழிப் பாடம் படிக்கின்றவர்களுக்கு. சிறப்புப் பாடங்களிலும் மற்றவைகளிலும் கல்வெட்டு பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. கல்வெட்டுகள் பற்றிய கருத்துக்கள் வருகின்றன. ஆகவே, கல்வெட்டுகளுக்கென்று தனியாகப் புத்தகங்கள் இருக்கின்றன. ஆனால், கல்வெட்டை ஆராய்ந்து பார்க்கும் அத்தகைய பயிற்சி அங்கே அளிக்கப்படவில்லை. இதை மேலும் விரிவடையச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்து வருகிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இந்தப் புதைபொருள் ஆராய்ச்சிக்கான பயிற்சி அளிக்கும்போது 80 ரூபாய் தருவதாகக் குறிப்பிட்டார்கள். இப்படிப் பயிற்சி பெற்றவர்களை நாம் எந்த வகையில் பயன்படுத்துகிறோம்? அப்படிப் பயன்படுத்தியதன் மூலம் என்ன பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப் பயிற்சிப்பெற்றவர்கள் வரலாற்று ஆசிரியர்களாகவும், வரலாற்று ஆராய்ச்சியாளர்களாகவும் ஆவதற்குப் பயன்படுகிறார்கள். தமிழகத்தில் மட்டும் 80,000 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இதுவரையில் 25,000 முதல் 26,000 வரையில் கல்வெட்டுகளுக்குப் படி எடுக்கப்பட்டிருக்கிறது. ஆறாயிரம், ஏழாயிரம் கல்வெட்டுக்களுக்குப் படி எடுத்துப் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்திருக்கிறது. ஆனால், மேலும் இந்தத் துறையில் ஆராய்ச்சிகள் நடத்த நடத்த பல்வேறுவிதமான வரலாற்றுச் சிறப்புக்குரிய கற்கள் கிடைக்கும். அதுமட்டுமல்லாமல், வரலாற்றிலேயே புதிய ஆராய்ச்சிகளை உண்டாக்கக்கூடிய சில செய்திகளையும் நாம் பெற முடிகிறது. அப்படிப்பட்ட கல்வெட்டு எழுத்துக்களைப் படிப்பதற்கே ஒரு தனித் திறமை பெற வேண்டும். அந்தத் திறமையை இந்த ஆராய்ச்சியாளர்களுக்குத் தந்தால் வரலாற்றுத் துறையில் ஈடுபடுகிறவர்களுக்கு அது உதவியாக இருக்கும் என்ற நோக்கத்துடன் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பயிற்சி அளித்து கல்வெட்டுக்களையெல்லாம் ஆராய்ந்து வரலாற்றுச் சிறப்புக்குரிய கற்களிலுள்ள எழுத்துக்களைப் படி எடுத்தால் தமிழகத்தினுடைய வரலாறு சிறப்பான தன்மையில் அமைய அது உதவி புரிவதாக இருக்கும்.